நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

June 2017

2017

தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு (ஆண்டு 5, 6)
Level : Intermediate - Lower (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 60 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

கீழே தரப்பட்ட 1 முதல் 10 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்யவும்.

1. ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’
‘கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு’

இந்த இரு வாக்கியங்களையும் கூறியவர் யார்?
(a) திருவள்ளுவர்
(b) ஔவையார்
(c) திருமூலர்

2. தமிழ் மக்கள் கல்வியை எந்த உறுப்பிற்கு இணையாக கருதுகிறார்கள்?
(a) வாய் (b) மூக்கு (c) கண்

3. இரை மீட்டலுக்கு ஒத்த சொல் எது?
(a) கடித்தல் (b) சிரித்தல் (c) அசைபோடுதல்

4. ‘காற்றுள்ள போதே தூற்றிக் கொள்’ என்ற பழமொழி எதனை வலியுறுத்துகின்றது?
(a) காற்றில் பட்டம் விடுதல்
(b) சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது
(c) ஐயம் திரிபறக் கற்றல்

5. ‘ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்’
இப்படிக் கூறியவர் யார்?
(a) பாரதியார்
(b) கவிச்சக்கரவர்த்தி கம்பர்
(c) திருவள்ளுவர்

6. உழவர் திருநாள், தமிழர் திருநாள் என அழைக்கப்படும் தமிழர் பண்டிகை எது?
(a) சித்திரை வருடப் பிறப்பு
(b) தீபாவளிப் பண்டிகை
(c) தைப் பொங்கல் விழா

7. இந்து மதத்தவர் மட்டும் கொண்டாடும் பண்டிகை எது?
(a) பொங்கல் பண்டிகை
(b) தமிழ்ப்புத்தாண்டு
(c) தீபாவளிப் பண்டிகை

8. ‘ஜல்லிக்கட்டு’ என்றால் என்ன?
(a) கிட்டியடித்தல்
(b) கிளித்தட்டு
(c) காளையை அடக்குதல்

9. தமிழரின் பண்டிகைகளில் அடங்காத எது?
   (a) தைப் பொங்கல்
   (b) தமிழ்ப்புத்தாண்டு
   (c) ஹோலிப்பண்டிகை

10. தமிழரின் வீர விளையாட்டாகக் கருதப்படுவது எது?
   (a) கபடி (b) கிட்டியடித்தல் (c) ஜல்லிக்கட்டு

11 முதல் 13 வரை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து கோடிட்ட இடத்தை நிரப்புக:

11. தைப்பொங்கல் ஒரு ....
   (விளா, விலா, விழா)

12. .... தமிழர்களின் விளையாட்டுகளில் ஒன்றாகும்.
   (கிழித்தட்டு, கிலித்தட்டு, கிளித்தட்டு)

13. இன்றைய .... மிகவும் பயனுள்ளதாக இருந்தது.
   (கலந்துரையாடல், களந்துரையாடல், கழந்துரையாடல்)

14 முதல் 15 வரையான கீழ்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களை தெரிவு செய்க.

14. ஆறுமுக நாவலர் பிறந்த இடம்
   (a) சென்னை (b) மதுரை (c) யாழ்ப்பாணம்

15. இவர்களில் நோபல் பரிசு பெற்ற மேதை யார்?
   (a) பாரதியார் (b) சி.வி. இராமன் (c) இராமானுஜன்

16 முதல் 20 வரையான வினாக்களைப் பூர்த்தி செய்க.

16. ‘அன்னையும் பிதாவும் முன்னறி ....

17. நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தின் தலை நகரம் சிட்னி.
   விக்டோரியா மாநிலத்தின் தலைநகரம் மெல்போர்ன்.
   பிரிஸ்பேன் எதன் தலைநகரம்? ....

18. 12 மாதங்கள் ஒரு வருடம் ஆகும்.
   ஒரு வருடம் என்பது எத்தனை நாட்களை உள்ளடக்கியது? ....

19. அவுஸ்திரேலிய தற்போதைய பிரதமர் யார்? ....

20. திருவள்ளுவர் இயற்றிய நூலின் பெயர் என்ன? ....

21 முதல் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.

21. ‘வாழ்க தமிழ் மொழி’ என்ற தமிழ் மொழி வாழ்த்துப்பாடலை இயற்றியவர் யார்?
   (a) பாரதியார்
   (b) திருவள்ளுவர்
   (c) கம்பர்

22. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழரின் பாரம்பரிய பிரதேசமாக விளங்குவது எது?
   (a) தமிழ் நாடு
   (b) சிட்னி
   (c) கொழும்பு
   (d) கன்பரா

23. தமிழ்ச் சங்கம் என்றால் என்ன?
   (a) பண்டைய மன்னர்கள் சங்கம் அமைத்து தமிழை வளர்த்தமையால் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெற்றது
   (b) தமிழ்ப் பாடல்கள் தமிழ்ச் சங்கம் எனப்பட்டது
   (c) இந்தியாவின் மறுபெயர் தமிழ்ச் சங்கம்
   (d) இந்துமதம் தமிழ்ச் சங்கம் எனப்பட்டது

24. சங்க கால இலக்கியங்கள் எனக் கூறப்படுபவை எவை?
   (a) தமிழர்களின் உணவுகள்
   (b) சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்
   (c) தமிழ் மக்களின் உடைகள்
   (d) தமிழ் மக்களின் கோவில்களும் சிற்பங்களும்

25. பண்டைய தமிழ் மக்களின் கலைகள் எவை?
   (a) கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை
   (b) விவசாயம், உணவுவகைகள், உடைகள்
   (c) கோவில்கள், பாடல்கள், நாட்டுக்கூத்து
   (d) போர்தேங்க்காய், வண்டிச்சவாரி, ஓட்டப்போட்டி

26. புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் கோயில் அமைந்துள்ள இடம் எது?
   (a) சிட்னி
   (b) மதுரை
   (c) லண்டன்
   (d) யாழ்ப்பாணம்

27. மாமல்லபுரம் தமிழரின் எக் கலையைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது?
   (a) சிற்பக்கலை
   (b) நடனக்கலை
   (c) கட்டுடக்கலை
   (d) இசைக்கலை

28. கன்னியாகுமரியில் கடலின் நடுவில் யாருடைய நினைவு மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது?
(a) கண்ணகி
(b) திருவள்ளுவர்
(c) சுவாமி விவேகானந்தர்
(d) மஹாத்மா காந்தி

29. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதன் பொருள் என்ன?
(a) ஒருவனுக்கு ஓர் ஊர் மட்டுமே சொந்தம்
(b) எல்லாத் தேசமும் எமது தேசம். நாம் எல்லோரும் உறவினர்
(c) எல்லாம் எனக்கு மட்டுமே சொந்தம்
(d) உலக மக்கள் அனைவரும் ஒரு மதத்தினர்.

30. இராமாயணம் தமிழில் யாரால் எழுதப்பட்டது?
(a) கண்ணதாசன்
(b) கம்பர்
(c) திருவள்ளுவர்
(d) பாரதியார்

கீழே தப்பட்ட படங்களை உபயோகித்து 31 இருந்து 33 வரையிலான வினாக்களுக்கு பொறுத்தமான விடையை தெரிவு செய்க

படம் பார்த்து இராமாயண நிகழ்ச்சிகளை எழுதுக

31

32

33

கீழே தரப்படுள்ள 34 முதல் 36 வரையிலான சொற்களைச் சேர்த்து எழுதுக

34. பத்து + ஆறு : ....

35. இருபது + ஒன்று : ....

36. இருபது + ஐந்து : ....

கீழே தரப்படுள்ள 37 இருந்து 39 வரை பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலை செயற்படுபொருள் என்பனவற்றை எழுதுக?

37. நான் ஆறாம் வகுப்பில் கல்வி கற்கின்றேன்
38. அழகான தோகையை விரித்து மயில் நடனம் ஆடியது
39. கண்ணன் புல்லாங்குழல் வாசிக்கின்றான்

வினா	எழுவாய்	பயனிலை	செயற்படுபொருள்
37			
38			
39			

40 முதல் 42 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான உறவு முறையை தெரிவு செய்க

40. அம்மாவின் தங்கை
   (a) சித்தி
   (b) பெரியம்மா
   (c) பாட்டி
   (d) அத்தை

41. அப்பாவின் அண்ணன்
   (a) பெரியப்பா
   (b) பாட்டா
   (c) சித்தப்பா
   (d) மச்சான்

42. அம்மாவின் அண்ணன்
   (a) மகன்
   (b) மருமகள்
   (c) மாமா
   (d) அண்ணா

43 முதல் 44 வரையான வினாக்களுக்கு விளக்கம் கூறுக.

43. “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பதால் நீங்கள் என்ன அறிந்து கொண்டீர்கள் என்பதை விளக்குக.

....

....

44. “முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்“ என்பதால் நீங்கள் என்ன அறிந்து கொண்டீர்கள் என்பதை விளக்குக.

....

....

45 கீழே தரப்படுள்ள 45 முதல் 49 வரையான வினாக்களுக்கு எதிர்ச் சொற்கள் தருக

45. இரவு ....

46. நீதி ....

47. ஏற்றம் ....

48. இளமை ....

49. நம்பிக்கை ....

50. உமக்கு விருப்பமான வளர்ப்புப் பிராணி பற்றி 3 வாக்கியம் எழுத்துக

....

....

....

....

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2017